20.01.2026

O.S.No. 51/2021

PW1– சுப்பிரமணியன் – த/பெ. மேகலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.01.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. பிராது தபசில் கடை கட்டிடத்தின் நகர அளவையானது தென்காசி நகராட்சி, வார்டு சி, பிளாக் 13 , டவுண் சர்வே 283ன் முழுவிஸ்தீரணமும் கடை எண்.33 என்றால் கடையானது 1650 ச.அடியாகும். ஆனால் எனது பிராதில் 1400 அடி என கூறியிருந்தேன் என்றால் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. சாட்சியிடம் பிராதை காண்பித்து தபசில் விவரத்தில் 1400ச.அடி பரப்பளவு தான் உள்ளது என்றால் அது தவறாக உள்ளது.

2. எனது பிராதில் பிராது கடையின் எல்கைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கடையின் மொத்த விஸ்தீரணம் 1728 ச.அடி அது முழுவதும் செல்வராஜ்க்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 01.07.2016 முதல் 30.06.2019வரை 3 ஆண்டுக்கான பிராது தபசில் கடை கட்டிடத்தின் மாத வாடகை ரூ.51,000/- என நிர்ணயம் செய்து திருக்கோவில் சார்பாக செல்வராஜ்க்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல, எனக்குதான் அனுப்பப்பட்டது.

3. திருக்கோவிலில் செல்வராஜ்தான் வாடகைதாரராக உள்ளார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு செல்வராஜ் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் அவர் இறந்துவிட்டார். எனது பிராதில் அவர்

இறந்தவிவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. 2019 லேயே பிரதிவாதி தரப்பில் எனக்கு அனுப்பிய அறிவிப்பில் செல்வராஜ் இறந்ததை பிரதிவாதி குறிப்பிட்டுதான் எனக்கு அனுப்பினார்கள். அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன், அதுதான் வா.சா.ஆ.2 ஆகும்.

4. 2016 முதல் 2019 வரை வாடகை நிர்ணயம் செய்த அறிவிப்பு பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பிற்கு என்னால் ஆட்சேபனை தெரிவிக்க எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.எனக்கு ஆட்சேபனை தெரிவிக்க உரிமையில்லாத காரணத்தினால்தான் கோவில் நிர்வாகம் என்னுடைய ஆட்சேபனையை நிராகரித்துவிட்டது. 2019 முதல் 2022 வரை பிரதிவாதிகள் ரூ.71,000/– என மாத வாடகை நிர்ணயம் செய்து செல்வராஜ் மற்றும் எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல, எனக்கு மட்டும் அனுப்பினார்கள். அந்த அறிவிப்பிற்கு நான் எந்த ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல.

5. வாடகைதாரரின் உரிமை என்பது வாடகையை பாக்கி இல்லாமல் செலுத்துவது என்றால் சரிதான். நான் 12.09.2019 ல் ரூ.2,80,000/– திருக்கோவிலுக்கு செலுத்தியதாகவும், அதற்கு திருக்கோவில் ரசீது வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. வாடகை பாக்கி எதுவும் இல்லாமல் நான் வாடகை செலுத்தி வந்தது பொய் என்றால் சரியல்ல. நான் கொரனோ காலத்தில் வாடகை விலக்கு கேட்டது சட்ட சம்பந்தமில்லாதது என்றால் சரியல்ல.

6. எனது பிராதில் வழக்குமூலத்தில் பிரதிவாதிகள் என்னை கடையை காலிசெய்ய அச்சுறுத்தினார்கள் என பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல. எனது பிராது பத்தி 12 ல் கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. திருக்கோவில் நிர்வாகத்தின் வாடகை நிர்ணயத்தை ஆட்சேபனை செய்து நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல்செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

7. 28.10.2025 ல் பிரதிவாதிகள் எனக்கு தமிழ்நாடு இந்து அறநிலையச்சட்டம் பிரிவு 78 ன் கீழ் அறிவிப்பு அனுப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அதற்கான ஒப்புதல் அட்டையும் என்னிடம் காண்பிக்கப்பட்டது. **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனக்கும், பிரதிவாதி கோவிலுக்கும் Privity of contract இல்லை என்றால் சரியல்ல.

8. நான் செல்வராஜ் இறந்தபின்பு பிரதிவாதியிடம் கடையை ஒப்படைத்திருக்கவேண்டும் என்றும், அதற்குபின்பு நான் அனுபவத்தில் இருப்பது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. நானும் செல்வராஜ்ம் பங்குதாரர் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு தபசில் சொத்தை பொறுத்தவரை அத்துமீறி அனுபவத்தில்இருக்கும் நபர் என்றால் சரியல்ல. நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி